# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**<u>CC.NO-13/2022</u>**

**List of Witness LW1 Examined as PW1 (Complainant)**

| | | | |
|---|---|---|---|
| Name | முத்து | Age: | 49 |
| Father's name | நல்லையா | Calling: | விவசாயம் |
| Village | கல்லுக்காரன்பட்டி | Taluk | கந்தர்வகோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 o69n the day of 04.11.2025

(1 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளான சரவணன், மாரி என்ற உதயசூரியன், வினோத், பிரபாகரன், ராமன், குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 22.09.2021ம் தேதி காலை சுமார் 08.30 மணியளவில், ஊராட்சி மன்ற தலைவராக இருந்த எனது மனைவி சாந்தி என்பவருக்கு புதூர் கிராமத்தில் இருந்து பஞ்சாயத்து செயலாளர் திருப்பதி என்பவர் போன் செய்து குடிநீர் இணைப்பு சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டிருப்பதாக தகவல் சொல்லியுள்ளார். எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் என்னை அங்கு சென்று சமாதானம் செய்துவிட்டு வருவமாறு சொன்னார். நான் புதூர் கிராமத்திற்கு 08.30 மணியளவில் சென்றேன். சித்திரவேல் மற்றும் அவரது மனைவி சுமதியிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூடுதலாக குடிநீர் இணைப்பு வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு நான் குடிநீர் இணைப்பு சாலையின் ஊடாக ஏற்படுத்தவேண்டும் என்பதால், மறுநாள் இணைப்பு கொடுப்பதாக சொன்னேன். அவர்களை சமாதானம் செய்துகொண்டிருந்தபோது, அங்கு வந்த காரில் வந்த கல்லுக்காரன்பட்டி ஊராட்சியை சேர்ந்த சிதம்பரம் கண்டியார் மகன் சரவணன் என்பவர் நீ என்னடா ஆளு புண்டைா மகனே, நீ என்னடா இங்கு பைப் போடுறது என்று அசிங்கமாக திட்டி, எனது சட்டையை பிடித்து இழுத்து கிழித்துவிட்டார். ஏன் எனது சட்டையை கிழிக்கிறாய் என்று கேட்டபோது, தீடிரென்று கம்பை எடுத்து அசிங்கமாக திட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி இடது தோள்பட்டையிலும், இடது மார்பிலும் அடித்துவிட்டார், அதனால் எனது இடது மார்பில் சிராய்ப்பு காயமும், இடது தோள்பட்டையில் வீக்க காயம் ஏற்பட்டது.

2. அப்போது எதிரி மாரி என்ற உதயசூரியன் பின்னால் வந்து புண்டைா மகனே என்று அசிங்கமாக திட்டி கம்பால் எனது முதுகில் அடித்துவிட்டார். எனது கூடவந்த கருப்பையா என்பவரை எதிரிகள் வினோத், பிரபாகரன்,குமார், ராமன் ஆகியோர் சேர்ந்து கம்பால் அடித்தார்கள். நான் மயக்கத்தில் இருந்ததால் தடுக்க முடியவில்லை. சத்தம் கேட்டு ஊர் ஆட்கள் வந்துவிட்டதால் எதிரிகள் காரில் ஏறி கிளம்பிவிட்டார்கள். அப்போது எதிரிகள் உதயசூரியன் மற்றும் சரவணன் ஆகியோர் சத்தமாக இன்னைக்கு தப்பிச்சுட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கூறினார்கள். பிறகு நான் என்னுடைய வாகனத்தில் கருப்பையவுடன் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது. புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. அந்த புகார் வாக்குமூலத்தில் பழனிவேல்,த/பெ.கருப்பையா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் போலிசாரிடம் பழனிவேல் மற்றும் கருப்பையா ஆகிய இரண்டு நபர்கள் என்று குறிப்பிட்டு சொன்னேன். இரண்டு நபர்களும் வேறு வேறு நபர்கள் ஆவார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சுருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**